# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள்.16.10.2020 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 16.10.2020

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2020–2021–ன் கீழ் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் ரூ.488.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள், தடுப்புச்சுவர், பாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அரசாணை (டி) எண்.303 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ2) நாள்.09.09.2020–ன்படி, முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் ந.க.எண்.15089/2020/டிஒ2 நாள்.17.09.2020–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 16.10.2020–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக ஐடியா பிராண்ட் சொலியூசன்ஸ் விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், தி ஹந்து மற்றும் தி ஹந்து தமிழ் திசை தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 22.09.2020–ம் நாள் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.1,44,795/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை ஐடியா பிராண்ட் சொலியூசன்ஸ் விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தொகையினை வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 232**

**பொருள் : 2**

கொரோனா–19 தடுப்பு நடவடிக்கையாக நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட்டினை சமூக இடைவெளி கடைப்பிடிக்க பழனி சாலையில் அபி மஹால் எதிரில் புல எண்.655/2, 654/1, 655/1ஏ மற்றும் 621ஏ/4பி–ல் திரு.கே.சி.பி.சுரேஷ்குமார் என்பவருக்கு சொந்தமான சுமார் 2.86 ஏக்கர் நிலத்தில் இரண்டாக பிரித்து, நடைபெற்று வருகிறது. மேற்படி காந்தி மார்க்கெட் காய்கனி கமிஷன் ஏஜென்ட் கடை உரிமையாளர்கள் நலச்சங்கம் சார்பில் காந்தி மார்க்கெட் காய்கறி வரத்து கூடுதலாக உள்ளதாகவும், அதன் காரணமாக நகராட்சி மூலம் பழனி சாலையில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக மார்க்கெட்டில் காய்கறிகள் இறக்கி விற்பனை செய்ய அமைக்கப்பட்டுள்ள 32 கடைகள் போதுமானதாக இல்லாததால் கூடுதலாக கடைகள் அமைத்துக்கொடுக்க கேட்டு வரப்பெற்ற விண்ணப்பத்தின் பேரில், மேற்படி தற்காலிக மார்க்கெட் கிழக்கு பகுதியில் கூடுதலாக 150 அடி நீளத்திற்கு கடைகள் அமைக்கும் வகையில் வாடகை அடிப்படையில் தற்காலிக செட் அமைக்க நகராட்சி பொறியாளரால் பரிந்துரைக்கப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.4.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. கொரோனா–19 தடுப்பு நடவடிக்கையாக பழனி சாலையில் உள்ள இடத்தில் கூடுதல் கடைகள் அமைக்க உடன் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 233**

**பொருள் : 3**

கொரோனா–19 தடுப்பு நடவடிக்கையாக நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட்டினை சமூக இடைவெளி கடைப்பிடிக்க பழனி சாலையில் அபி மஹால் எதிரில் புல எண்.655/2, 654/1, 655/1ஏ மற்றும் 621ஏ/4பி–ல் திரு.கே.சி.பி.சுரேஷ்குமார் என்பவருக்கு சொந்தமான சுமார் 2.86 ஏக்கர் நிலத்தில் இரண்டாக பிரித்து, நடைபெற்று வருகிறது. மேற்படி காந்தி மார்க்கெட் காய்கனி கமிஷன் ஏஜென்ட் கடை உரிமையாளர்கள் நலச்சங்கம் சார்பில் காந்தி மார்க்கெட் காய்கறி வரத்து கூடுதலாக உள்ளதாகவும், அதன் காரணமாக நகராட்சி மூலம் பழனி சாலையில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக மார்க்கெட்டில் காய்கறிகள் இறக்கி விற்பனை செய்ய அமைக்கப்பட்டுள்ள 32 கடைகள் போதுமானதாக இல்லாததால் கூடுதலாக கடைகள் அமைத்துக்கொடுக்க கேட்டு வரப்பெற்ற விண்ணப்பத்தின் பேரில், மேற்படி தற்காலிக மார்க்கெட் கிழக்கு பகுதியில் கூடுதலாக கூடுதலாக 250 அடி நீளத்திற்கு கடைகள் அமைக்கும் பொருட்டு மேற்படி கடைகளுக்கு மின் விளக்கு வசதி ஏற்படுத்த நகராட்சி பொறியாளரால் பரிந்துரைக்கப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/– மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. கொரோனா–19 தடுப்பு நடவடிக்கையாக பழனி சாலையில் உள்ள இடத்தில் கூடுதல் கடைகளுக்கு மின் விளக்குகள் அமைக்க உடன் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 234**

**பொருள் : 4**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலைத்தில் 200 ams fuse carier, power room-ல் Tube light 6 எண்ணம் ஏற்கனவே இருக்கும் உயர்மின் அழுத்ததினால் சேதம் ஏற்பட்டு பயன்பாடு இல்லாமல் உள்ளது. இரவில் கிணற்றிற்கு சென்று வரவேண்டியுள்ளது. எனவே தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் 200 ams fuse carier 10 எண்ணம் மற்றும் Tube light 6 எண்ணம் வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.12,800/– தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணியினை விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 235**

**<u>பொருள் : 5</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரை கடித ந.க.எண்.11/செமதொ/2020 நாள்.27.07.2020, 14.08.2020 மற்றும் 21.08.2020—ன் பேரில் ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசின் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளை நான்காண்டு சாதனை மலராக கீழ்க்காணும் தினசரி நாளிதழ்களில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | வெளியீடு செய்த நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | மாலை மலர் | 21.08.2020 | 9975/— |
| 2 | தினகரன் | 16.09.2020 | 15750/— |
| 3 | தமிழ் முரசு | 05.10.2020 | 12600/— |

**<u>அலுவலக குறிப்பு:—</u>**

1. அனுமதிக்கலாம் .
2. மாவட்ட ஆட்சித்தலைர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரையின்பேரில், மேற்படி விளம்பரம் மேற்கொள்ளப்பட்ட செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் — 236</u>**

**<u>பொருள் : 6</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 18 வார்டுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடன் பழுது நீக்கம் செய்து மக்களுக்கு பயன்பெறும் வகையில் பழுது நீக்கப்பொருட்கள் நகராட்சியில் இருப்பில் இல்லாததால், மேற்படி பணிக்கான பொருட்கள் வாங்கிக்கொள்ள ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.2.10 இலட்சம் மன்றத்தின்அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:—</u>**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணி விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் — 237</u>**